بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/03/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾
اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது மரணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இறுதி ஹஜ் செய்தார்கள். அந்நேரத்தில் குழப்பவாதிகள் தலைதூக்க ஆரம்பித்திருந்தனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஜ்ஜை விட்டு திரும்பும்போது ஹஸ்ரத் முஆவியா அவர்களும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் மதீனாவுக்கு வந்தார்கள். ஹஸ்ரத் முஆவியா அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தனியாக சந்தித்து ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். குழப்பம் அதிகரிப்பதைக் காண முடிகிறது. தாங்கள் என்னுடன் சிரியாவுக்கு வந்து விடுங்கள். ஏனென்றால் சிரியாவில் எல்லாவித அமைதியும் உள்ளது. எவ்வித குழப்பமும் இல்லை என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் பதில் அளிக்கும் விதமாக கூறினார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருகாமையை எவ்விதத்திலும் விட்டுவிட தயாராக இல்லை; என்னுடைய உடல் சிதறடிக்கப்பட்டாலும் சரியே! ஹஸ்ரத் முஆவியா அவர்கள் கூறினார்கள்: அவ்வாறு என்றால் என்னுடைய இரண்டாவது ஆலோசனை என்னவெனில், தங்களுடைய பாதுகாப்பிற்காக சிரியாவின் ஒரு படைப்பிரிவை அனுப்பி வைக்க எனக்கு அனுமதி தாருங்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் பதில் கூறினார்கள்: உஸ்மானின் உயிரைப் பாதுகாப்பதற்காக பைத்துல் மாலின் மீது இந்த அளவு சுமையை என்னால் போடவும் முடியாது; படையை வைத்துக்கொண்டு மதீனாவாசிகளை வறுமையில் ஆழ்த்தவும் நான் விரும்பவில்லை. இதைக் கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள், அவ்வாறென்றால் மூன்றாவது ஆலோசனை என்னவெனில், உஸ்மான் இல்லாமல் போய்விட்டால் என்ன? இங்கிருக்கும் சஹாபாக்களில் ஒருவரை முன்னிறுத்தலாம் என மக்கள் துணிவு கொண்டுள்ளனர். ஆகவே சஹாபாக்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைத்து விடுங்கள் என்றார். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், இதை ஏன் செய்ய வேண்டும்? எந்த மக்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒன்று சேர்த்தார்களோ அவர்களை நான் சிதறடிக்க வேண்டுமா என்ன? என்றார்கள். இதைக்கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். இந்த திட்டங்களை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் குறைந்தபட்சம் மக்களிடையே இந்த ஒரு அறிவிப்பையாவது செய்து விடுங்கள். அதாவது, என்னுடைய உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு பழிவாங்கும் உரிமை முஆவியாவுக்கு உண்டு என அறிவித்து விடுங்கள். ஒருவேளை மக்கள் இதற்கு அஞ்சி விஷமத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றார். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், முஆவியாவே! எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நான் இதையும் செய்ய முடியாது. ஏனென்றால் நீங்கள் கடினமான இயல்பு கொண்டவர் ஆவீர். ஆகவே நீங்கள் முஸ்லிம்களின் மீது ஒருவேளை கடுமை காட்டலாம் என்றார். இதைக் கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அழுதவாறு அங்கிருந்து எழுந்து நின்று, எனக்கு புரிகிறது. இது கடைசி சந்திப்பாக இருக்கலாம் என்றார்கள். பிறகு வெளியே வந்து ஸஹாபாக்களைப் பார்த்து, இஸ்லாத்தின் பாதுகாப்பு உங்களைச் சார்ந்துள்ளது. ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இப்போது முற்றிலும் பலவீனமாகி விட்டார். குழப்பம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

நீங்கள் அன்னாரை பாதுகாத்து வாருங்கள் எனக் கூறிவிட்டு சிரியாவை நோக்கி புறப்பட்டார்கள்.

**ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் ஷஹாதத்திற்கு முன்னுள்ள குழப்பத்தை குறித்தும், அன்னாருடைய ஷஹாதத் சம்பவத்தைக் குறித்தும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

கிளர்ச்சியாளர்களுக்கு வெளிப்படையாக வெற்றி கிடைத்துவிட்டது. அவர்கள் கடைசியாக ஒரு தந்திரத்தை மேற்கொண்டனர். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கிலாஃபத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு ஒரு நபர் மூலமாக செய்தி அனுப்பினார்கள். ஏனென்றால் உஸ்மானே பதவி விலகிக் கொண்டால் இவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும், சந்தர்ப்பமும் இருக்காது என புரிந்து வைத்திருந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் அந்த தூதுவனிடத்தில், நான் அறியாமைக் காலத்திலும் தீமையில் இருந்து விலகி இருந்தேன். இஸ்லாமிய காலத்திலும் அதன் கட்டளைகளை முறிக்காமல் இருக்கிறேன். இறைவன் எனக்கு வழங்கிய பொறுப்பை எந்த குற்றத்தின் அடிப்படையில் நான் விட்டு விட வேண்டும்? இறைவன் எனக்கு அணிவித்த இந்த மேலங்கியை நான் ஒருபோதும் கழற்ற மாட்டேன் என்றார்கள். அந்நபர் இந்த பதிலைக் கேட்டு விட்டு திரும்பிச் சென்று விட்டான். மேலும் தமது தோழர்களிடத்தில் சென்று இச்செய்தியை இவ்வாறு அவர்களுக்கு எடுத்துரைத்தான். இறைவன் மீது ஆணையாக! நாம் கடும் சிக்கலில் சிக்கிக் கொண்டோம். இறைவன் மீது ஆணையாக! உஸ்மானை கொலை செய்தால் அன்றி நாம் முஸ்லிம்களின் பிடியில் இருந்து தப்ப முடியாது.

ஆகவே, பக்கத்திலிருக்கும் ஏதேனும் ஒரு வீட்டின் சுவரேறிக் குதித்து ஹஸ்ரத் உஸ்மானை கொலை செய்துவிடலாம் என அவர்கள் தீர்மானித்தனர். அவர்கள் உள்ளே நுழைந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். அந்நாட்களில் இதைத் தவிர இன்னொரு வேலையையும் அன்னார் செய்து வைத்திருந்தார்கள். அது என்னவென்றால், கிளர்ச்சியாளர்கள் வீட்டினுள் நுழைவதற்கு முன்பு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இரு நபர்களை கஜானாவை பாதுகாக்கும் பொருட்டு நியமித்திருந்தார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு முந்தைய இரவில் கனவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தென்பட்டார்கள். ‘இன்று மாலை எம்முடன் நோன்பு திறங்கள்’ என்று கனவில் அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள். இந்த கனவின் அடிப்படையில் இன்று தாம் ஷஹீதாகி விடுவோம் என்று அன்னார் உறுதி கொண்டிருந்தார்கள்.

தாக்குதல் தொடுத்தவர்களுள் ஒருவன் முன்னே சென்று ஒரு இரும்பு கம்பியால் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் தலையில் அடித்தான். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த திருக்குர்ஆனை எட்டி உதைத்து வீசி எறிந்தான். திருக்குர்ஆன் அன்னாருக்கு அருகில் வந்து விழுந்தது. அன்னாருடைய தலையிலிருந்து இரத்தத்துளிகள் வழிந்து அதில் விழுந்தன. ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் இரத்தம் எந்த ஆயத்தில் சிந்தியதோ அது மாபெரும் முன்னறிவிப்பாக இருந்தது. அந்த முன்னறிவிப்பு தமக்குரிய காலத்தில் எந்த அளவு கம்பீரமாக நிறைவேறியது என்றால், மிகக் கடினமான உள்ளம் கொண்டவர் கூட அந்த இரத்தம் தோய்ந்த எழுத்துக்களின் காட்சியைப் பார்த்து அச்சமுற்று தம் கண்களை மூடாமல் இருக்கமாட்டார். அந்த வசனம் என்னவென்றால், فَسَيَكْفِيكَهُمُ اللّٰهُ ۚ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ **அல்லாஹ் உமக்காக அவர்களை நிச்சயம் பழி வாங்குவான். அவன் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனும் ஆவான்.** *(திருக்குர்ஆன் 2:138)*

அதன் பிறகு, இன்னொருவன் முன்னேறிச் சென்று வாளைக் கொண்டு அன்னாரை தாக்க விரும்பினான். அவன் முதலாவதாக தாக்கியபோது, அன்னார் தமது கைகளைக் கொண்டு அதை தடுத்தார்கள். அன்னாருடைய கை வெட்டுப்பட்டது. அப்பொழுது அன்னார், இறைவன் மீது ஆணையாக! இது முதன் முதலில் திருக்குர்ஆனை எழுதிய கையாகும் என்றார்கள். அதன்பிறகு அவன் இரண்டாம் முறையாக தாக்கி அன்னாரை

கொன்று விட விரும்பினான். அப்பொழுது ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுடைய மனைவி நாயிலா அவர்கள் அங்கு வந்து இருவருக்கும் இடையில் சென்று நின்று விட்டார்கள். ஆனால் கல் நெஞ்சமுடைய அவன் ஒரு பெண் மீது தாக்குதல் தொடுப்பதை விட்டும் விலகவில்லை. அவன் வாளை வீசினான். அதனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியினுடைய விரல்கள் துண்டாகி விட்டன. அதன் பிறகு அவன் மீண்டும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மீது வாள் வீசி அன்னாரை கடுமையாக காயப்படுத்தினான். அதன் பிறகு கல்நெஞ்சம் கொண்ட அவன், இன்னும் உயிர் பிரியவில்லை; ஒருவேளை பிழைத்துக் கொள்ளலாம் எனக் கருதி அன்னாருடைய கழுத்தை நெரிக்க ஆரம்பித்தான். அன்னாருடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டு மேலுலகம் செல்லாதவரை அன்னாரின் கழுத்தை விடவில்லை. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இப்போது இஸ்லாமிய ஆட்சிப் பீடம் கலீஃபா இல்லாமல் காலியாக ஆகிவிட்டது. மேற்கொண்டு முயற்சி செய்வது வீணானது எனக்கருதி மதீனாவாசிகள் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று அமர்ந்து விட்டார்கள். குழப்பவாதிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்ற பிறகு வீட்டுக்குள் வரம்பு மீற ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் மனைவி அவ்விடத்தை விட்டு விலகிச்செல்ல நினைத்தார்கள். உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி அவ்விடத்தை விட்டு திரும்பிச் செல்லும் போது, கிளர்ச்சியாளர்களுள் ஒருவன் தம் கூட்டாளிகளிடத்தில் அவரை குறித்து மிகவும் அருவருக்கத்தக்க சொற்களில் விவரித்தான். அவர்களின் வெட்கமின்மை எந்த அளவு மேலோங்கியிருந்தது என்றால், எந்த ஒரு தீய செயலையும் செய்ய அவர்கள் தயங்கவில்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இறைவன் எனக்கு மிகப்பெரும் அந்தஸ்தை வழங்கியுள்ளான். நான் அதில் பெருமிதம் கொள்கிறேன். ஆனால் எனது உள்ளத்தின் அவா என்னவென்றால், அந்தோ! நான் இப்போது (பிறந்து) இருக்காமல் அந்நேரத்தில் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! நான் அவர்களை துண்டு துண்டாக ஆக்கி இருப்பேன். அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை பர்தா இல்லாமல் ஆக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்ட விதத்தை காணும்போது, தன்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதைக் குறித்து அவர்கள் ஒருபோதும் அஞ்சவில்லை என்று தெரிய வருகிறது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நாம் அறிவைக் கொண்டு பார்ப்போமானால் இந்த கிலாஃபத் தொடர் மாபெரும் தொடர் என்பதை அறிந்து கொள்ளலாம். மற்றவர்களைக் குறித்து நான் அறியேன். ஆனால் குறைந்தபட்சம் என்னைக் குறித்து நான் அறிவேன். ஒருபுறம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கால வரலாற்றை படித்த பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் மீது விழுந்த துன்பங்களையும் பார்க்கிறேன். இன்னொருபுறம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றிய பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடத்தில் உருவாக்கிய அந்த ஒளியையும், ஆன்மீகத்தையும் நான் பார்க்கிறேன். உலகில் எனக்கு பத்தாயிரம் சந்ததிகள் பிறக்க இருக்கிறார்கள் என்றாலும், அந்த அனைத்து சந்ததிகளையும் ஒரேடியாக ஒன்று சேர்த்து தியாகம் செய்வதால், (ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட) அக்குழப்பம் தீர்க்கப்பட்டு இருக்குமாயின் அது 'பேனைக் கொடுத்து யானையை வாங்கிய பேரம்' ஆக இருந்திருக்கும் என்றே நான் கருதுகிறேன். அதாவது மிகச் சிறிய பொருளைக் கொடுத்து பெரிய பொருளை வாங்கிய பேரம் ஆக இருந்திருக்கும்.

ஹஸ்ரத் உமர் அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் பொறுப்பில் இருப்பதற்கு தகுதியானவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) திகழ்ந்தார்கள். அனைத்து சஹாபாக்களின் பார்வையும் அன்னாரின் மீதே இருந்தது. பெரும் சஹாபாக்களின் ஆலோசனையினால் இந்த பணிக்காக அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்

(ஸல்) அவர்களின் மருமகனாக இருந்தார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புதல்விகள் ஒருவர் பின் ஒருவராக அன்னாருடனேயே மணம் முடிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பார்வையில் அன்னாருக்கிருந்த சிறப்பான அந்தஸ்தும், தகுதியும் இதிலிருந்தே நமக்கு தெரிய வருகிறது.** ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவாசிகளின் பார்வையிலும் மிகவும் மேன்மையான இடத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, தாம் தப்லீக் செய்வதற்காக தேர்ந்தெடுத்த முக்கியமானவர்களுள் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு மிக்க கண்ணியம் கொடுத்து வந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படுத்திருக்கும் போது ஹஸ்ரத் அபூபக்ர் வந்தார்கள். அன்னார் (ஸல்) அப்படியே படுத்திருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் வந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களும் அப்படியே படுத்திருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் வருகை தந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) உடனே சுதாரித்துக்கொண்டு தனது ஆடையை சரி செய்தார்கள். உஸ்மானுடைய இயல்பில் அதிக வெட்க உணர்வு உள்ளது. ஆகவே அவருடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து நான் இவ்வாறு நடந்து கொண்டேன் என்று கூறினார்கள்.

**இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பும் கூட மதுவை தொடாத, விபச்சாரத்தை நெருங்காத அரிய மக்களுள் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் திகழ்ந்தார்கள்.** ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) சாதாரண மனிதர் ஒன்றும் கிடையாது. மாறாக மிகவும் உயரிய நல்லொழுக்கங்கள் அன்னாரிடம் காணப்பட்டன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் மீது மிகவும் திருப்தி கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறுதி மூச்சு வரை அன்னாரின் மேலான விருப்பத்தை பெற்ற ஆறு நபர்களுள் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உமர் தேர்ந்தெடுத்திருந்தார்கள். **(இவ்வுலகிலேயே) சொர்க்கத்திற்கான நற்செய்தி பெற்ற பத்து பேரில் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் இருந்தார்கள்.**

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் 17 அல்லது 18 துல்ஹஜ்ஜா அன்று ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டில் ஜுமுஆ நாளில் அஸர் தொழுகைக்குப் பிறகு தமது 82 ஆம் வயதில் ஷஹீதானார்கள். ஷஹீதானபோது அன்னார் நோன்பு நோற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்அம் அவர்கள் அன்னாருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். சனிக்கிழமை இரவு மக்ரிப் இஷாவுக்கு இடையில் **'ஹஷே கவ்கப்'** எனும் இடத்தில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இந்த இடம் **'ஜன்னத்துல் பகீஃ'** -க்கு மிகவும் அருகில் இருந்தது.

விரைவில் ஒரு நல்ல ஆண்மகன் இறந்து போவார். அவர் அங்கு அடக்கம் செய்யப்படுவார். மக்கள் அதை பின்பற்றி நடப்பார்கள் என ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நல்லடக்கம் குறித்து ஒரு அறிவிப்பு இவ்வாறும் காணக்கிடைக்கிறது. குழப்பவாதிகள் மூன்று நாட்கள் வரை அன்னாரை அடக்கம் செய்ய விடவில்லை என்று வந்துள்ளது. பிறகு ஹஸ்ரத் அலீ அவர்களின் முயற்சியினால் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். எவ்வாறிருப்பினும், அன்னாரின் நற்குறிப்பு இன்னும் உள்ளது. இனி வரும் காலத்தில் அது எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், ஐவரிகோஸ்டின் மவ்லவி முஹம்மது இத்ரீஸ் சாஹிப், யுகண்டாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அமீனா நைகா காரே சாஹிபா, சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய நூஹீ கஸக் சாஹிப் மற்றும் ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஃபர்ஹத் நஸீம் சாஹிபா ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)